செ.வெ.எண்.512 நாள்: 25.08.2023

# பத்திரிக்கை செய்தி

நீலகிரி மாவட்டம் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் ஒருங்கிணைந்த சேவை மையம் (One Stop Centre)-க்கு கீழ்க்கண்ட பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் தேர்வு செய்ய உள்ளதால், பின்வரும் தகுதிகளுடன் உள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | தேர்ந்தெடுக்கப் படும் பதவியின் பெயர் | காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை | கல்வித் தகுதிகள் | ஊதியம் |
|---|---|---|---|---|
| 1 | சமூக நல தனியாளர் (Case worker) | 2 | சமூகப்பணி, ஆலோசனை உளவியல் அல்லது மனிதவள மேலாண்மையில் இளங்கலை பட்டம் பெற்றிருக்க வேண்டும். ஒரு ஆண்டு தொண்டு நிறுவனங்கள், அரசு சார்ந்த திட்டங்களில் பணி புரிந்தவராகவும், பெண்களுக்கு எதிரான வன்முறைகளில் ஒருவருடம் ஆலோசனை வழங்குவதில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். பெண்கள் மட்டும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கவும், உள்ளூரில் வசிப்பவராக இருக்க வேண்டும். | ரூ.15000/- |

எனவே, ஒருங்கிணைந்த சேவை மையம் (One Stop Centre) -க்கு மேற்கண்ட பணியிடத்திற்கு விண்ணப்பங்களை நீலகிரி மாவட்ட சமூகநல அலுவலர், மாவட்ட சமூகநல அலுவலகம், உதகையில் 05.09.2023 அன்று பிற்பகல் 5 மணிக்குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

***அனுப்ப வேண்டிய அலுவலக முகவரி:***

மாவட்ட சமூகநல அலுவலர்,
மாவட்ட சமூகநல அலுவலகம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலக கூடுதல் வளாகம்,
பிங்கர்போஸ்ட், உதகை – 643006
நீலகிரி மாவட்டம்.

தொலைபேசி எண்: 0423 – 2443392

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்

NilgirisPRO ProNilgiris NilgirisPRO